# கிழக்கிலங்கையில் யுத்தத்திற்கு பிந்திய ஆயுதக்களைவு, குழுக்களைக் கலைத்தல் மற்றும் மீள் ஒருங்கிணைப்புச் செயன்முறை: கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவு குறித்த விடய ஆய்வு

**Fazil, MM* & Kamalasri, V**

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வானது யுத்தத்திற்கு பின்னரான DDR (Disarmament, Demobilization and Reintegration - ஆயுதக்களைவு, குழுக்களைக் கலைத்தல் மற்றும் மீள ஒருங்கிணைத்தல்) செயன்முறை குறித்ததாகும். ஐக்கிய நாடுகளின் எழுத்துக்களின்படி DDR என்பது முக்கியமாக முன்னாள் போராளிகள் (Ex-combatants) குறித்த தொடர் விடயமாக அமைவதுடன் இது முழு சமாதான செயன்முறையினதும் ஓர் பகுதியாகவும் உள்ளது. இவ் DDR எண்ணக்கருவின் பிரகாரம் யுத்தத்தின் பின்னர் சமாதானத்தை கட்டியெழுப்புமுகமாக சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் முன்னாள் போராளிகள் சமூகத்துடனும் பொருளாதாரத்துடனும் மீளிணைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகின்ற போதிலும் நடைமுறையில் அச்செயன்முறை வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுவதில் பல சவால்கள் எதிர்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக இலங்கையைப் பொறுத்தவரை இச்செயன்முறையானது அரசாங்கத்தினால் பாதுகாப்பு பிரிவினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் மீளிணைப்பிற்கு மாறாக முன்னாள் போராளிகளுக்கும் சமூகத்திற்கும் இடையில் இடைவெளியையே உருவாக்கியுள்ளது. இந்நிலையில் இவ்வாய்வானது DDR எண்ணக்கருவினை அடிப்படையாகக் கொண்டு கிழக்கிலங்கையில் யுத்தத்தில் பங்கெடுத்த முன்னாள் போராளிகளின் சமூக, பொருளாதார, உள மற்றும் பாதுகாப்பு ரீதியான நிலைமைகளை பரீசீலித்து அவர்கள் எதிர்நோக்கும் சவால்களை வெளிக்கொணர முயற்சிக்கின்றது. அவ்வகையில் இக்கட்டுரை பண்புரீதியான முறையியலின் அடிப்படையில் தரவுகள் சேகரிக்கப்பட்டு விவரணப்பகுப்பாய்வு முறை ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் கிழக்கிலங்கையில் யுத்தம் முடிவடைந்து 08 வருடங்கள் கழிந்த நிலையிலும் முன்னாள் போராளிகள் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படாமை, சமூகப் பாதுகாப்பின்மை, வேலைவாய்ப்பின்மை மற்றும் உள நோய்களுடன் தமது நாளாந்த வாழ்வினை கொண்டு நடாத்துகின்றமையும் இவ்வாய்வின் மூலம் வெளிப்படுத்தப்படும் முடிவாகும்.

**பிரதான சொற்கள்:** முன்னாள் போராளிகள், சமாதானத்தை கட்டியெழுப்புதல், மீள ஒருங்கிணைத்தல்

To whom correspondence should be addressed: fazilmoh@gmail.com

*Lecturer, Department of Political Science, South Eastern University of Sri Lanka.